## பாலங்கள்

*562 வினு.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், கும்முடிப்பூண்டி–மாதர் பாக்கம் நெடுஞ்சாலையில், ஈகுவார்பாளையம் அருகே ஓடப்பேரிக் கால்வாயின் மேல் சிறு பாலம் கட்ட செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: ஆம்.

திரு. கா. வேழவேந்தன் : இந்தத் திட்டத்தையும் அமைச்சர் அவர்கள் நேரில் வெயிலில் வந்து பார்த்தார்கள். பஸ் போக்கு வரத்து அதிகமாகவுள்ள இந்தப் பாதையில் ஒரு சிறிய பாலம் கட்டப்படாத காரணத்தினுல் மழைக்காலங்களில் இரு பக்கங் களிலும் பஸ்கள் நின்றுவிடுகின்றன. ஆகவே இந்த ஆண்டாவது அதை எப்படியும் முடிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திட்ட மதிப்பீடு ரூ. 9 லட்சம். கடந்த ஆண்டு முயற்சி செய்தோம். இந்த ஆண்டு முயற்சி செய்து எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறுர்.

*563 வினு.—திரு. எஸ். வடிவேல் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தாலுகாவில் முக்கூட்டு (பனங்காட்டாங்குடி) பாலத்தை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.